



# தோட்டம்

தோட்டத்தில் உள்ள செடிகளுக் கெல்லாம்
தண்ணீர் பாய்ச்சிட வேண்டும்
ஒன்று விடாமல் எல்லாச் செடிகளும்
பூத்துக் குலுங்கிட வேண்டும்!

முல்லை மல்லிகை செம்பருத்தி என
எல்லாப் பூவையும் பறித்திடுவேன்
அழகழகான மாலைகள் கட்டி
ஆண்டவனுக்குப் படைத்திடுவேன்!

பள்ளியில் உள்ள கலைமகள் சிலையை
அன்புடனே நான் அலங்கரிப்பேன்
நல்லதை மட்டும் தந்திடு என்று
நாள் தோறும் நான் வணங்கிடுவேன்

என்னைப் போன்றே பள்ளியில் உள்ள
எல்லோருக்கும் அருளிடு என்று
வெள்ளைத்தாமரைப் பூவினில் உள்ள
அன்னையிடம் நான் துதித்திடுவேன்!